## 17. தலைப்பு 17 - பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகம்

### 17.1 கணக்காய்வின் நோக்கெல்லை

பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள், ஏனைய அறிக்கைகள் என்பவற்றினை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 ஆகஸ்ட் 14 ஆந் திகதி அலுவலகச் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் மீதான மீளாய்வினதும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகளின் செவ்வை பார்த்தலினதும் அடிப்படையில் எழுந்தனவாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்கு கிடைக்கப் பெற்ற பதவியணியினர், ஏனைய வளங்கள், நேரம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவு விரிவானதொரு கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

### 17.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் திட்டமிடல், அமுல்படுத்துதல், பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**17.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இங்கே (அ) முதல் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் கீழே 17.4 இலிருந்து 17.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்படுகின்றது.

**(அ) கணக்காய்வு ஐயவினாக்களுக்கான பதிலளிப்பு**

மீளாய்வாண்டின் போது அலுவலகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாவிற்கு 2014 மார்ச் 31 ஆம் திகதி வரையிலும் பதிலளிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) பாதீட்டு முரண்**

05 செலவின விடயங்களுக்காக மிகை ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தால் ஏற்பாடு பயன்படுத்தப்பட்டதை அடுத்து ரூபா 138,629 அதாவது அச் செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பட்டின் 9 சதவீதத்திற்கும் 16 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் எஞ்சியிருந்தது.

**17.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**17.4.1 உள்ளகக் கணக்காய்வு**

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**17.4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு செயற்படுத்தல்**

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவின் கூட்டம் ஒரு தடவை மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**17.5 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

தெரிவுக கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை** | | |
| VII ஆம் அத்தியாயத்தின் 9.3 ஆம் பிரிவு | - | 2004 ஆம் ஆண்டு முதல் வருடாந்த சம்பள ஏற்றத்திற்கு மேலாக 10 சம்பள ஏற்றங்கள் சகல உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. |
| XXI ஆம் அத்தியாயம் | 42,000 | சீருடைப் படிப்பணம் உரித்தான உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக பதவிநிலை அல்லாத 07 உத்தியோகத்தர்களுக்காகவும் சீருடைப் படிப்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| **(ஆ) பொது நிர்வாகச் சுற்றறிக்கை** | | |
| 2009 யூன் 17 ஆம் திகதிய 09/2009 (i) ஆம் இலக்க சுற்றறிக்கையின் | | |
| 2 ஆம் பந்தி | | 05 உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் பதியப்பட்டிருக்கவில்லை. |
| 3 ஆம் பந்தி | | அலுலகத்தில் உள்ள பதவியணியைக் கருத்திற்கொள்ளாது சகல அலுவலகங்களிலும் கைவிரல் அடையாள |

| | | |
|---|---|---|
| | | இயந்திரம் பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் இதன் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 2013 ஏப்ரல் 22 ஆம் திகதிய 05/2013 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 02 (அ) பந்தி | 22,000 | சீருடைக்கு உரித்தான உத்தியோகத்தர்களின் அங்கீகரித்த எல்லைக்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது. |

**17.6 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல்வாங்கல்கள்**

---------------------------------------------------------------------------------------------------

பாராளுமன்ற சபை முதல்வரின் அலுவலகத்தில் அகில இலங்கை சேவைகளான இலங்கை நிர்வாக சேவையின் மற்றும் ஒன்றிணைந்த சேவையின் உத்தியோகத்தர்கள் கடமையாற்றியிருந்ததுடன் அவ் உத்தியோகத்தர்களுக்கு பாராளுமன்ற ஊழியர்களுக்கு வழங்கப்பட்ட வருடாந்த சம்பள ஏற்றத்திற்கு மேலதிகமாக 4 சந்தர்ப்பங்களின் போது 10 சம்பள ஏற்றங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவ் உத்தியோகத்தர்கள் பாராளுமன்ற பதவியணிக்கு வெளியே வேறு திணைக்களங்களுக்கோ அமைச்சுக்களுக்கோ இடமாற்றலாகிச் செல்லும் சந்தர்ப்பங்களின் போது அந் நிறுவனங்களில் கடமையாற்றும் சமமான தரத்திலான ஏனைய உத்தியோகத்தர்களின் சம்பளத்துடன் முரண்கள் ஏற்படக்கூடியதாக இருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**17.7 மனிதவளங்கள் முகாமைத்துவம்**

--------------------------------------------------------

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

--------------------------------------------------------------------------------------------------------------

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | பதவியணியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 03 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 10 | 08 | 02 |
| (iv) | ஆரம்ப நிலை | 14 | 11 | 03 |
| (v) | ஏனையவை (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 03 | 03 | - |
| | மொத்தம் | 31 | 26 | 05 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 05 வெற்றிடங்களை நிரப்புவதற்கு நிறுவனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.